රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතන<br>தொலைபேசி: **(94) 011- 2696211-13**<br>Telephone **(94) 011- 2166000** | ෆැක්ස්<br>தொலைநகல்: **(94) 011- 2695279**<br>Fax | ඊ-මේල්<br>மின்னஞ்சல்: **information@pubad.gov.lk**<br>E-mail | වෙබ් අඩවිය<br>இணையத்தளம்: **www.pubad.gov.lk**<br>Web Site |
|---|---|---|---|

| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/DOS/අන්තර්ග්‍රහණ පොදු විමසීම් | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி:<br>Date | 2024.03.22 |
|---|---|---|---|---|---|

அமைச்சின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்ப்புச்செய்ய விருப்பம் தெரிவித்து, இதுவரை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படாத உத்தியோகத்தர்களது நிறுவன நடவடிக்கைகள் தொடர்பானது.</u>**

அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட எனது இலக்கம் CS/DOS/Policy/Public/01 மற்றும் 25.10.2021, 02.06.2023 ஆம் திகதிய கடிதங்களுக்கு மேலதிகமாகவாகும்.

02. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்த அனைத்து உத்தியோகத்தர்களையும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்ப்புச்செய்ய வேண்டும் என்பதோடு, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்து இதுவரை உள்ளீர்க்கப்பட்டிராத தொடர்புடைய சேவைப் பிரிவின் தரம் III இன் பதவியொன்றில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு ரூ.37,720/-க்கு மேற்பட்ட சம்பள ஏற்றத்தினை வழங்கும் இயலுமை இல்லை என அனுப்பப்பட்ட 02.06.2023 ஆம் திகதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

03. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்களின் கடிதங்கள்/ஆவணங்களை முதல் சந்தர்ப்பத்திலேயே (2021 ஆம் ஆண்டில்), சமர்ப்பித்து பல வருடங்கள் கடந்துள்ளமையினாலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்க்கப்பட உத்தியோகத்தர்கள் விருப்பம் தெரிவித்த பின்னர் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 16/2010 இன் கீழ் வேறு நிறுவனங்களுக்கு இடமாற்றமடைந்து செல்வதாலும் சில உத்தியோகத்தர்களின் சேவை நிலையங்களை கண்டறிய இயலாமையாலும், கணிசமான எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யும் எதிர்வரும் பணிகளை

மேற்கொள்ள முடியாதுள்ளதோடு அந்த உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஓய்வுபெறச் செய்தல் ஆகிய நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடியாதுள்ளது

04. அதன்படி, அனுப்பப்பட்ட 2021.10.25 ஆம் திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தற்போது, செயலற்றுக் காணப்படும் கோப்புகளாக அதிக எண்ணிக்கையிலான கோப்புகள் இனங்காணப்பட்டுள்ளமையினால் வெளியிடப்பட்டுள்ள செயலற்ற கோப்புகள் குறித்த தகவல்களை இந்த அமைச்சின் இணையதளத்தில் வெளியிட்டுள்ளதோடு அத்தகவல்களுக்கு கீழே உள்ள இணைப்பின் மூலம் உட்பிரவேசிக்கலாம்

https://www.pubad.gov.lk/web/images/contents/cs-services/dos/dos-files-submitted-for-absorbtion-and-inactive-for-more-than-3-years.pdf

05. அதன்படி, தங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் பின்வரும் வகுதிகளுக்குரிய உத்தியோகத்தர்களின் தகவல்கள் இந்த ஆவணத்தில் உள்ளதா என்பதைப் பரீட்சிக்குமாறு உரிய விடயப்பொறுப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களை அறிவுறுத்துமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (உத்தியோகத்தர்களது தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பெயர் பாவனையில்)

- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டு இன்னும் உள்வாங்கப்படாத உத்தியோகத்தர்கள்
- அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 16/2010 இன் படி வேறு அரச நிறுவனங்களில் இருந்து இடமாற்றமடைந்து வந்துள்ள உத்தியோகத்தர்கள்
- அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 01/2012 இன் படி பதவி உயர்வு நடைமுறைகளில் உள்ளடங்காத உத்தியோகத்தர்கள்
- சம்பள ஏற்றங்கள் அல்லது பதவி உயர்வுகளில் சிக்கல்கள் நிலவும்1994 முதல் 2011 வரை அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள்

06. உங்கள் நிறுவனத்தில் அவ்வாறான உத்தியோகத்தர்கள் இருப்பின், குறைபாடுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள்/தகவல்களை தாமதமின்றி எனக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்..

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்